1984 மார்ச் 5]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகராட்சி குடிநீர்த் திட்டத்தை எவ்வளவு காலத்தில் செயலாற்ற அரசு ஆணை இட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல திட்ட அறிக்கை 1984-85 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டு, அந்த அறிக்கை அரசுக்கு வந்த பிறகு, எவ்வளவு விரைவிலே அதற்கு அனுமதி தர வேண்டுமோ அவ்வளவு விரைவில் அனுமதி தந்து, எவ்வளவு விரைவில் தொகை பெற வேண்டுமோ, அதைப் பெற்று, எவ்வளவு விரைவில் அதை அமுல்படுத்த முடியுமோ, அவ்வளவு விரைவில் அமுல்படுத்த எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை இராயபுரம் தொகுதியில் சாக்கடை அடைப்பினால் ஏற்படும் சுகாதாரக்கேடு.

168—(*வினா எண். 19172) திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயபுரம் தொகுதி புதிய 13-வது வட்டத்தில் உள்ள ஆதம்சாகிப் தெரு, ஆண்டியப்ப முதலி தெரு, அப்பையர் சந்து ஆகிய இடங்களில் அடிக்கடி சாக்கடை அடைப்பு ஏற்பட்டு சுகாதாரக்கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) ஆம்.

(ஆ) அப்பையர் சந்து, ஆண்டியப்ப முதலி தெரு ஆகிய இடங்களில் மாட்டுக் கொட்டகைகள் அதிகம் இருப்பதால் கழிவு நீர் தடை நேரிடுகிறது. இவை உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றன. ஆதம்சாகிப் தெருவின் கழிவுநீர்க் குழாய்கள் பழுதடைந்து இருக்கின்றபடியால் கழிவுநீர்த்தடை அடிக்கடி ஏற்படுகிறது. குழாய் மாற்றும் வேலை விரைவில் தொடங்க இருக்கிறது.

[1984 மார்ச் 5

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 13-வது வட்டத்தை ஒட்டித்தான், 14, 15, 16 ஆகிய வட்டங்கள் இருக்கின்றன. ஆனால் போர்டு உருவாவதற்கு முன்னால் இந்த வேலைகளை எல்லாம் மாநகராட்சி நிர்வகித்து வந்தது. அந்த நேரத்தில் மாநகராட்சி ஒரு திட்டம் தீட்டியது. ராபின்சன் பார்க், அதாவது இப்போது அண்ணா பார்க் என்று அழைக்கப் படுகிற அந்த பார்க் அருகில் ஒரு சம்ப் கட்டி அதிலே காலை யிலே வருகின்ற கழிவு நீரைத் தேக்கி வைத்து, மாலையிலோ, அல்லது பகலிலோ திறந்துவிடுகின்ற ஒரு திட்டத்தை மாநகராட்சி தயாரித்தது. அந்தத் திட்டம் அமல்படுத்தப்படுமானால், இத் தகைய அடைப்புகள் அடிக்கடி ஏற்படாது என்ற கருத்து நிலவு கிறது. ஆகவே இந்த திட்டத்தை மீண்டும் பரிசீலிக்க போர்டு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள அரசு தற் போது எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றிச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் அவர்கள் ஒரு திட்டத்தைச் சொல் கிறார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றிய முழு விவரங்களையும் கொடுப்பார்களேயானால் அதை மெட்ரோ வாட்டர் எம். டி. அவர்களிடம் கொடுத்து, பரிசீலனை செய்யச் சொல்வதில் அட்டி யில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, நான் வலியுறுத்துவதற்குக் காரணம் என்னவென்றால், காலையிலேதான் சாக்கடை, மலம் போன்றவைகள் எல்லாம் வெளியே வருகின்றன. நம்முடைய அமைச்சர் பூசப் அவர்கள் கூட அங்கே சென்று பார்த்தார்கள். அங்கே ஒரு மசூதி இருக்கிறது. அந்த மசூதி யைச் சுற்றிலும் தான் இந்த அவல நிலையிருக்கிறது. அந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்கள் விரும்பினால் தருகிறேன். துரிதமாக நடவடிக்கை எடுத்து, இந்தச் சுகாதாரக் கேட்டை விரைவிலே நிரந்தரமாக நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : தலைவர் அவர் களே, என்னிடம் இருக்கிற தகவல்படி, குழாய் மாற்று வேலைகள்- அடிக்கடி கழிவு நீர்க்குழாய்கள் பழுதடைகின்ற காரணத்தால் தான் இந்த நிலை ஏற்பட்டது என்று உறுதியாகச் சொன்னார்கள் விரைவில் தொடங்கயிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் அதைவிட உறுதியாக தன்னுடைய திட்டத்தை வலியுறுத்து கிற காரணத்தால், அந்த பர்ட்டிகுலர்ஸ், அந்த விவரங் களைக் கொடுப்பார்களானால், தகவல்களைக் கொடுப்பார்களா எால், இந்த அரசு பிரிசீலனை செய்ய தயாராக இருக்கிறது.

1984 மார்ச் 5]

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் சொல்கின்றபோது, ஒன்றைச் சொன்னார்கள். மாடுகள் அதிகமாக இருந்து, அதனால், சாணம் வைக்கோல் போன்றவைகளால் அடிக்கடி அடைப்புகள் ஏற்படுத்கிறது என்று சொன்னார்கள். அது உண்மைத்தான். எனவே இது சம்பந்தமாக, இந்த மாடுகளை நகரத்தை விட்டு கொஞ்சம் தூரம் தள்ளி வைத்து, நான்கு பக்கங்களிலும், அந்த மாடுகளை வைத்து பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் ஒரு திட்டம் இருந்தது. அந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமானால், நிச்சயமாக மாடுகள் நகரத்தைவிட்டு அகற்றப்படுகின்ற நிலை இருக்குமானால் கழிவுநீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருக்காது. அதோடு கூட, இந்த கழிவு நீர் சம்பந்தமாக 1920-ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இது. அன்றைய ஜனத் தொகைக்குத் தகுந்தபடி அமைக்கப்பட்ட திட்டம். ஆனால் இப்போது பத்து மடங்கு ஜனத் தொகை அதிகரித்திருக்கிறது. ஆகவே, உடனடியாக, முழுமையாக இந்த கழிவுநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, பழுதடைந்துள்ள அந்தக் குழாய்களை மாற்றுவதற்கு திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. மாடுகள் எல்லாம் சென்னை நகரத்தைவிட்டு வெளியே போக வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார் என்று கருதுகிறேன். அப்படி மாடுகளை நகரத்தை விட்டு வெளியிலே வைத்து, பராமரிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுதிமொழியும் கொடுத்து, திட்டத்தைத் தருவார்களானால், அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்யலாம்.

கொடைக்கானல் தாலுக்காவிலுள்ள பூலத்தூர், கும்பரையூர் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

169—(*வினா எண். 19408) திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுக்கா பூலத்தூர், கும்பரையூர் ஆகிய ஊர்களில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பண்ணைக்காட்டிலிருந்து இவ்விரண்டு ஊர்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். தற்போதைய குடிநீர் விநியோகம் இவ்விரு கிராமங்களின் முழுத் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

(ஆ) குடிநீர் வடிகால் வாரிய ஆய்வில் உள்ளது.